# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,
# திருநெல்வேலி பிரிவு

## செய்திக் குறிப்பு

## தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களுக்கு SDAT ஊக்க உதவித் தொகை.

2016–2017– ஆம் கல்வி ஆண்டில் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு தங்கம்,வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபரகணங்கள் வாங்குவதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் அவர்களின் பெற்ற பதக்கங்களின் அடிப்படையில் ரூ.6000/- ரூ.4000/- ரூ.2000/- ஊக்கத்தொகை வழங்கப்படவுள்ளது. **ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2017க்குள்** தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டியில் தங்கம் , வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்கள் வென்றவர்கள் தகுதியானவர்கள்.

தகுதியுடைய திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு வீரர்கள் , வீராங்கனைகள் தங்களுடைய பெயர், முழுமுகவரி, செல்நம்பர் மற்றும் சான்றிதழ்களின் நகலுடன் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம், மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அண்ணா விளையாட்டரங்கம், திருநெல்வேலி -2 என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் **29.07.2017 மாலை 5.00 மணிக்**குள் நேரடியாக வந்து சமர்ப்பிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 0462–2572632 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர்.க. சேவியர் ஜோதி சற்குணம்** அவர்கள் தமது செய்திகுறிப்பில் தெரிவித்தார்கள்.

ஒம்/–

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்,
திருநெல்வேலி.